بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

# ஜுமுஆ பேருரை

**அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் உலகளாவிய தலைவர்**

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்- அல்லாஹ் தனது வல்லமை மிக்க உதவியினால் அவர்களை வலுப்படுத்துவானாக)

**பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாசலில் 23.01.15 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

**Summary of the Friday Sermon - 23, January 2014 (Tamil)**

தஷஹ்ஹுது, தஅவ்வுஸ், சூரா ஃபாத்திஹா ஆகியவற்றை ஓதிய பிறகு ஹுஸூர் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் கூறினார்கள்:

**பெரியவர்களுக்கு, அவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக சலாம் கூறிவிடுவதனால் நமது கண்ணியம் நிலைபெற்று விடும் எனக் கருதுவது போதுமானதன்று; மாறாக ஏழையின் கண்ணியத்தை கவனத்திற் கொள்வதும் அவசியமானதாகும். தன்மானத்தை வெளிப்படுத்துவதுதான் உண்மையானது. பெரிய மனிதர் நமது நபி (ஸல்) அவர்களைப் பற்றி தவறான வார்த்தைகளில் பேசுகிறார் என்றால் அவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அதற்கு முகியத்துவம் கொடுக்க வேண்டிய தேவையில்லை.**

தற்போது நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியம், மதிப்பு பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் எத்தகைய உயரிய அந்தஸ்து இருந்தது; ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை அவமரியாதை செய்யும்போது அவர்களின் எதிர் நடவடிக்கை எப்படி இருந்தது என்பதைப் பற்றி **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் எடுத்துக் கூறிய சில விஷயங்களை உங்களுக்கு முன்னால் எடுத்துரைப்பேன்.**

இது தொடர்பாக **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் ஓரிடத்தில் கூறுகிறார்கள்:** ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிப்பட்ட மஸீஹ் (அலை)அவர்கள் லாஹூர் அல்லது அமிர்தசரஸ் தொடர் வண்டி நிலையத்தில் இருந்தார்கள். பண்டித் லேக்ராமும் அங்கு வந்தார்; அவர் ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு சலாம் கூறினார். பண்டித் லேக்ராம் ஆரிய சமாஜத்தில் மிகப் பெரிய அந்தஸ்து கொண்டவராக இருந்தார். எனவே லேக்ராம் ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு சலாம் சொல்ல வந்திருக்கிறார் என நினைத்து சகோதரர்கள் மிகவும் மகிழ்ச்சியடைந்தனர். ஆனால் ஹஸ்ரத் (அலை) அவர்கள் அவர் பக்கம் கொஞ்சமும் கவனம் செலுத்தவில்லை. பண்டித் லேக்ராம் ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு சலாம் கூறியதை ஒருவேளை அவர்கள் பார்க்கவில்லை போலும் எனக் கருதி, பண்டித் லேக்ராம் தங்களுக்கு சலாம் கூறுகிறார் என அவர்களுக்கு எடுத்துக் கூறப்பட்டபோது, ஹஸ்ரத் (அலை) அவர்கள் மிக ஆவேசமாக, அவருக்கு வெட்கமில்லையா? அவர் எனது எஜமானரை வசைமாறி பொழிகிறார்; என்னிடம் வந்து சலாம் சொல்கிறார். ஆக, லேக்ராம் வந்திருக்கிறார் என்பதை அவர்கள் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. ஆனால் பொதுவான மக்களின் பார்வையில் ஒரு பெரிய தலைவரை சந்திப்பதற்கான வாய்ப்பு கிடைத்து விட்டால் அதுவே அவருக்கு மிகப் பெரிய வெற்றியாகிறது. அப்படிப்பட்ட பெரியவர் மக்களிடம் வரும்போது அவர்கள் மிக கவனத்துடன் அவரை சந்திக்கின்றனர். ஆனால் ஓர் ஏழை வந்தால் அவரை பொருட்படுத்துவதில்லை. ஆனால் மிர்ஸா சாஹிபின் தன்மான உணர்வைப் பாருங்கள். பண்டித் லேக்ரம் தாமே அவர்களைச் சந்திக்க வருகிறார். ஆனால் அவர்கள், எனது எஜமானரை வசைமாறி பொழிவதை நிறுத்தட்டும். பிறகு நான் சந்திக்கிறேன் என்று கூறுகிறார்கள்.

இங்கு இந்த சம்பவத்தில் ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் விஷயத்தில் அவர்களுக்கு இருந்த தன்மான உணர்வு வெளிப்படுகின்ற அதே நேரத்தில் பெரியவர்களுக்கு, அவர்கள் பெரியவர்களாக இருக்கிறார்கள் என்பதற்காக சலாம் கூறிவிடுவதனால் நமது கண்ணியம் நிலைபெற்று விடும் எனக் கருதுவது போதுமானதன்று; மாறாக ஏழையின் கண்ணியத்தை கவனத்திற் கொள்வதும் அவசியமானதாகும் என்ற படிப்பினையும் இருக்கிறது. தன்மானத்தை வெளிப்படுத்துவதுதான் உண்மையானது. பெரிய மனிதர் நமது நபி (ஸல்) அவர்களைப் பற்றி தவறான வார்த்தைகளில் பேசுகிறார் என்றால் அவர் எவ்வளவு பெரியவராக இருந்தாலும் அதற்கு

முக்கியத்துவம் கொடுக்க வேண்டிய தேவையில்லை என்ற ஒரு பாடமும் இருக்கிறது. ஆக, இந்த அறிவிப்பில் பல கோணங்கள் இருக்கின்றன.

இவ்வாறே இன்னொரு சம்பவத்தைக் குறிப்பிட்டவாறு **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தமது குழந்தைகளுடன் நடந்து கொண்டமுறை எப்படி இருந்ததென்றால், அவர்கள் மீது எப்போதாவது கோபமும் கொள்ள முடியும் என்பதை ஒருபோதும் நினைத்துப் பார்க்க முடியாதிருந்தது. நாங்கள் சிறுவர்களாக இருக்கும்போது ஹஸ்ரத் சாஹிப் ஒருபோதும்கோபம் கொள்வதில்லை எனக் கருதி வந்தோம். குழந்தைகளுடன் அன்பு கொண்டதற்கான தகுதி எந்த அளவுக்கு இருந்ததென்றால், ஹஸ்ரத் அப்துல் கரீம் சியால்கோட்டி (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: ஒருமுறை ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள், எனது விலாப்புறத்தில் வலிக்கிறது எனக் கூறினார்கள். கடைசியில் பார்த்தபோது சட்டைப் பையில் ஒரு செங்கல் துண்டு காணப்பட்டது. அதன் காரணமாக விலாவில் வலி ஏற்பட்டுள்ளது. ஹுஸூர்! இது எப்படி உங்கள் சட்டைப் பையில் வந்தது? என கேட்கப்பட்டபோது, மஹ்மூது இந்தக் கல்லை என்னிடம் கொடுத்து பத்திரமான வைக்குமாறு கூறினான். நான் அதனை பையில் போட்டிருக்கிறேன். அவன் கேட்கும்போது கொடுப்பேன் என்றார்கள். ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள். நான் ஹுஸூர் (அலை) அவர்களிடம் அதை என்னிடம் கொடுங்கள். நான் பாதுகாப்பாக வைத்துக் கொள்கிறேன் எனக் கேட்டேன். அதற்கு இல்லை; நான் இதை என்னிடமே வைத்துக் கொள்வேன் என்றார்கள். ஆக, அவர்களுக்கு பிள்ளைகளுடன் அந்த அளவுக்கு அன்பு இருந்தது. ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: அவர்கள் எங்கள் அனைவரையும் நேசித்து வந்தார்கள். ஆனால் **இந்த நேசம் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் நேசத்தை விட மேலோங்கவில்லை. அதிக நேசத்திற்குரிய மகன் (மிர்ஸா முபாரக் அஹ்மது)ஒருமுறை அறியாமையின் காரணமாக ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களுடைய கண்ணியத்திற்கு மாற்றமான ஒரு விஷயத்தைக் கூறியபோது அவனுடைய உடலில் வலுவாக அடித்தார்கள்.**

பிறகு இன்னொரு சம்பவத்தைக் கூறுகிறார்கள்: ஒருமுறை லாஹூரில் ஆரியர்களின் மாநாடு நடைபெற்றது. அதில் கலந்து கொள்ளுமாறு மிர்ஸா சாஹிப் அவர்களுக்கும் அழைப்பு வந்தது.மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி எவ்வித தவறான சொற்களும் பயன்படுத்த மாட்டோம் என மாநாட்டை நடத்துபவர்கள் வாக்குறுதியளித்தனர். ஆனால் மாநாட்டில் கடுமையாக வசைமாறி பொழியப்பட்டது. நமது ஜமாஅத்திலிருந்தும் சிலர் அங்கு சென்றனர். அவர்களில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் சிறப்பாக கண்ணியமளித்து வந்த மவ்லவி நூருத்தீன் (ரலி) அவர்களும் ஆவார்கள். மாநாட்டில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை கடுமையாக ஏசினர் என்பது தெரிய வந்தபோது ஹஸ்ரத் சாஹிப் அவர்கள் நூருத்தீன் (ரலி) அவர்களிடம், நீங்கள் அங்கு அமர்ந்திருப்பதை உங்கள் தன்மானம் எப்படி விரும்பியது? ஏன் எழுந்து வரவில்லை?எனக் கேட்டார்கள். அப்போது ஹஸ்ரத் (அலை) அவர்கள், மவ்லவி சாஹிப் அவர்கள் மீது கோபம் கொண்டு விடுவார்கள் போலும் என்று கருதும் அளவுக்கு அவர்கள் ஆவேசம் கொண்டார்கள்.

எனவே இன்று (அஹ்மதியல்லாத) இந்த மக்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பற்றி, இவர் தன்னை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களை விட பெரியவராகக் கருதுகிறார் என குற்றம் சாட்டுகின்றனர். நவூது பில்லாஹ். இவர்கள் இந்த உணர்வுகளுக்கு போட்டி போட முடியுமா? இந்த குற்றச்சாட்டைக் கூறுபவர்கள் ஹஸ்ரத் (அலை) அவர்கள் நபி (ஸல்) அவர்கள் மீது வைத்திருந்த அன்பைப் பார்த்தால் எவ்வளவு நன்றாக இருக்கும்!

பிறகு அப்துல்லாஹ் ஆத்தம் என்பவருடன் ஒரு விவாதம் நடந்தது. ஜங்கே முகத்தஸ் என்ற நூலில் ஆத்தமுடன் நடந்த வாக்குவாதம் அச்சிடப்பட்டது. இந்த விவாதம் ஹஸ்ரத் (அலை) அவர்கள் மஸீஹ் என்ற வாதத்தை வெளியிட்ட பிறகு நடைபெற்றது. மேலும் மவ்லவிமார்கள் அவர்களை காஃபிர் எனக் கூறி விட்டனர். மேலும் அவர்கள் கொலை செய்யப்பட வேண்டியவர் என்று மார்க்கத் தீர்ப்பு கொடுத்துவிட்ட காலமாகும். அத்தகைய தருணத்தில் அஹ்மதியல்லாத ஒருவருக்கு கிறித்தவரோடு விவாதம் ஏற்படுகிறது. அப்போது ஹஸ்ரத் (அலை) அவர்களிடம் தாங்கள் வந்து விவாதம் செய்யுங்கள் என விண்ணப்பிக்கப்படுகிறது. அப்போது அவர்கள் உடனே எழுந்து

நின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக, இஸ்லாத்தின் கண்ணியத்தை நிலைநாட்டுவதற்காக, அல்லாஹ்வின் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக அவர்கள் விவாதம் செய்யச் சென்று விட்டார்கள். இது அவர்களின் ஈமானுடன் தொடர்புடைய தன்மான உணர்வாகும். அதற்காக அவர்கள் எதனையும் பொருட்படுத்தவில்லை.

இது தொடர்பாக **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள்** மேலும் இரண்டு சம்பவங்களை எடுத்துக் கூறுகிறார்கள். அவற்றைக் கூறுகிறேன். டிபுடி ஆத்தம் பற்றிய எச்சரிக்கை வகையிலான முன்னறிவிப்பை ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறினார்கள். அதற்கான காலக்கெடு முடிந்தும் அவர் மரணிக்கவில்லை. வெளிப்படையைப் பார்க்கின்றவர்கள், மிர்ஸா சாஹிபின் முன்னறிவிப்பு பொய்யாயிற்று எனக் கூச்சலிடத் தொடங்கினர். ஒருமுறை பாவல்போரைச் சேர்ந்த நவாப் சாஹிப் அமர்ந்திருந்த இடத்தில் மக்கள் மிர்ஸா சாஹிபின் முன்னறிவிப்பு பொய்யாயிற்று; ஆத்தம் இன்று வரை உயிருடன் இருக்கிறார் எனக் கூறி கேலி கிண்டல் செய்தனர். அப்போது அங்கு சாச்டான்வாலாவைச் சேர்ந்த காஜா குலாம் ஃப்ரீது சாஹிப் அவர்களும் இருந்தார். அவர்களுடைய முரீதாக நவாப் சாஹிப் இருந்தார். பேச்சுகளுக்கிடையில் நவாப் சாஹிபின் வாயிலிருந்தும் ஆம்; மிர்ஸா சாஹிபின் முன்னறிவிப்பு பொய்த்துப் போனது என்ற வார்த்தை வெளிவந்து விட்டது. **அப்போது குலாம் ஃபரீது சாஹிப் ஆவேசம் கொண்டார்கள். மேலும் ஆத்தம் உயிருடன் இருக்கிறார் என்று யார் கூறுகிறார்? எனக்கோ அவருடைய சடலம் தென்படுகிறது என்றார். இதைக் கேட்டு நவாப் சாஹிப் மவுனமாகி விட்டார்கள்.** இந்த சம்பவத்தைக் குறிப்பிட்டு விட்டு ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: **சிலர் வெளிப்படையில் உயிருள்ளவர்களாகவும் இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மையில் மரணித்தவர்களாக இருக்கிறார்கள். மேலும் சிலர் மரணிட்தவர்களாக தென்படுகிறார்கள்; ஆனால் அவர்கள் உயிருள்ளவர்களாவர்.**

பிறகு இதே ஆத்தமைப் பற்றி இன்னோரிடத்தில் ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: நம்பிக்கை கொண்டவர்களின் வேலை அல்லாஹ்வின் மீது (தவக்குல்)நம்பிக்கை வைப்பதாகும். வேலையை இறைவன் செய்கிறான். ஆனால் நமது கடமை இறைவன் கூறுவதையே நாம் செய்ய வேண்டும்; சிந்திக்க வேண்டும்; கூற வேண்டும். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் ஆத்தமைப் பற்றி முன்னறிவிப்பு செய்தபோது முன்னறிவிப்பிற்கான காலக்கெடுவும் கடந்து விட்டபோது(அநேகமாக இது 1894 அல்லது 1895 ஆம் ஆண்டிற்கான சம்பவமாகும்). முஸ்லிஹ் மவ்வூது (ரலி) கூறுகிறார்கள். அப்போது எனக்கு அநேகமாக ஐந்தரை அல்லது ஆறு வயது இருக்கும். இப்போது வரை அந்தக் காட்சி எனக்கு நினைவிருக்கிறது. அந்த நேரத்தில் எனக்கு புரிய முடியாதிருந்தது. ஏனெனில் எனக்கு அப்போது சிறிய வயதாக இருந்தது. ஆனால் சம்பவத்திலிருந்து நான் புரிவதென்னவென்றால், ஆத்தம் பற்றிய முன்னறிவிப்பு நிறைவேற கடைசி நாளாக இருந்தபோது அதாவது **15 மாதங்கள் முடிவடைய இருந்தபோது எந்த அளவுக்கு சோதனையாக இருந்தது என்றால், இறைவா! ஆத்தம் மரணித்து விடட்டும் என மக்கள் தேம்பி அழுதழுது துஆ செய்து கொண்டிருந்தனர்.** இது அஸ்ர் தொழுகைப் பிறகு மக்ரிபுக்கு முன்னுள்ள நேரத்தில் நடந்ததாகும். பிறகு தொழுகைக்கான நேரம் வந்தது. ஹஸ்ரத் (அலை) அவர்கள் தொழ வைத்தார்கள். தொழுகைக்குப் பிறகு அவர்கள் கூட்டத்தில் அமர்ந்து விட்டார்கள். அன்று அழுதழுது துஆ செய்து கொண்டிருந்தவர்களை அவர்களின் **இந்த செயலின் காரணமாக ஹஸ்ரத் (அலை) அவர்கள் கோபத்தை வெளிப்படுத்தினார்கள். மேலும் இறைவனுடைய வார்த்தையில் அவனை விட தன்மான உணர்வு வேறு எந்த மனிதனுக்காவது இருக்க முடியுமா? எனக் கேட்டார்கள். அவ்வாறு நடக்கும் என இறைவன் கூறியிருக்கும்போது அப்படி கண்டிப்பாக நடக்கும் என நமக்கு ஈமான் இருக்க வேண்டும். மேலும் நாம் இறைவனுடைய விஷயத்தை தவறாகப் புரிந்திருக்கிறோம் என்றால் பிறகு அவன் நமது தவற்றிற்கு ஏற்ப தீர்ப்பளிப்பதற்கு அவன் கட்டாயமானவன் அல்லன்.** நமது வேலையெல்லாம் நாம் ஒருவரை நேர்மையாளராக நம்பிக்கை கொண்டிருக்கும்போது அவருடைய விஷயங்களின் மீது உறுதி கொள்ள வேண்டும்.

சுருக்கமாக நம்பிக்கையாளர் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். இறைவனின் விஷயம் எந்நிலையிலும் நிறைவேறியே தீர்கிறது. மேலும் நான் கூறியது போன்று இந்த முன்னறிவிப்பு நிறைவேறியது; மிக்க மகத்தான முறையில் நிறைவேறியது. ஆயினும் ஆத்தமின் பாவமன்னிப்பின் காரணமாக தற்காலிகமாக முன்னறிவிப்பு ஒத்தி போடப்பட்டது. ஆனால் கடைசியில் அவர் இந்தப் பிடியில் வந்து விட்டார்.

இது தொடர்பாக ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் பல இடங்களில் குறிப்பிட்டுள்ளார்கள். **அவர்கள் ஆத்தம் தொடர்பான முன்னறிவிப்பைப் பற்றி கூறுகிறார்கள்:**

''நமது ஜமாஅத் இந்த விஷயத்தை எப்போதும் கவனத்தில் வைத்துக் கொள்ளவேண்டும். ஆத்தம் திரும்பினான் என்பது எப்படி என்றால், முன்னறிவிப்பைக் கேட்டதுமே அவன் தனது நாவை வெளியே நீட்டினான்; காதுகளில் கை வைத்தான்; நடுங்கினான். (முகம்) மஞ்சள் விட்டது. ஒரு பெரும் கூட்டத்தில் அவன் இவ்வாறு திரும்பியது பார்க்கப்பட்டது. பிறகு அவன் மீது அச்சம் மேலோங்கியது. மேலும் நகரம் நகரமாக சுற்றித் திரிந்தான். அவன் தனது எதிர்ப்பை விட்டு விட்டான். பிறகு இஸ்லாத்திற்கு எதிராக ஒருபோதும் எதையும் அவன் வெளியிடவில்லை. (தனக்கு அச்ச உணர்வு ஏற்பட்டதா இல்லையா என்பதை)அறைகூவல் பிரசுரம் வெளியிட்டு அழைப்பு விடுத்தபோது அவன் (அச்சம் ஏற்படவில்லை என) சத்தியம் செய்ய வரவில்லை. உண்மையான சாட்சியை மறைத்ததன் விளைவாக அவனைப் பற்றி கூறப்பட்ட முன்னறிவிப்பிற்கேற்ப அவன் அழிவுக்குள்ளானான்.''

**பிறகு இன்னோரிடட்தில் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறினார்கள்:**

''இந்த முன்னறிவிப்பு நிபந்தனைக்குட்பட்டதாக இருந்தது. அவன் கவலைக்குள்ளாகி நகரம் நகரமாக சுற்றித் திரிந்தான். அவனுக்கு அவனுடைய தேவனாகிய இயேசுவின் மீது நம்பிக்கையும் உறுதியும் இருந்திருக்குமென்றால், பிறகு இந்த அளவுக்கு கவலைக்குள்ளாவதன் பொருள் என்ன? ஆனால் அவன் எப்போது உண்மையை மறைத்தானோ உலகை ஏமாற்ற நினைத்தானோ - ஏனெனில் உண்மையை மறைப்பது புரியாத சிலருக்கு தடுமாற்றத்திற்குக் காரணமாகலாம் - அப்போது இறைவன் தனது உண்மையான வாக்குறுதிக்கேற்ப நமது கடைசி பிரசுரத்திற்கு 7 மாதங்களுக்குள் அவன் உலகிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டான். மேலும் எந்த மரணத்திற்கு அவன் பயந்தானோ - ஓடி ஒளிந்து கொண்டிருந்தானோ அது அவனை வந்தடைந்தது.

விவாதம் நடந்து கொண்டிருக்கும்போது கிறித்தவ பாதிரிமார்கள் தமது கற்பனையில் ஒரு சாதுரியமன ஒன்றை நடத்தி ஹஸ்ரத் (அலை) அவர்களின் கண்ணியத்தை குறைக்க ஒரு சதித்திட்டம் தீட்டினர். ஆனால் அல்லாஹ் அவர்களின் தீங்கை அவர்களின் மீதே திருப்பி விட்டான். கிறித்தவர்களுக்கு ஏற்பட்ட நடுக்கம் பார்க்கத்தக்கது என சம்பவத்தைப் பார்த்தவர்கள் கூறினர். இது தொடர்பாக ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களின் சான்றை எடுத்துக் காட்டி **ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்:**

''கிறித்தவர்களின் ஏமாற்று வேலை ஒன்றுக்கும் உதவாமற் போய்விட்டபோது, அவர்கள் சில முஸ்லிம்களை தம்முடன் சேர்த்துக் கொண்டு கிண்டலுக்காக ஒரு விஷமத்தனத்தை செய்தனர். சில குருடர்களையும், செவிடர்களையும்,முடவர்களையும் அழைத்து வந்து, வாக்குவாதத்திற்கு முன்னரே அமர வைத்து விட்டனர். நீங்கள் மஸீஹ் என்றால் இவர்களை சரியாக்கிக் காட்டுங்கள் என்றனர். ஹஸ்ரத் முதல் கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இதைக் கேட்டு எங்கள் உள்ளங்கள் அதிர்ச்சியடைந்தன. இந்த விஷயம் தேவையில்லாதவை என்பதை நாம் அறிவோம். என்றாலும் இதனால் பாதிரிகளுக்கு கிண்டலடிக்கும் வாய்ப்பு கிடைக்குமே என்ற கவலை ஏற்பட்டது. ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை)அவர்களின் முகத்தைப் பார்த்தபோது அவர்களிடம் எந்த விதமான வெறுப்போ அல்லது அச்ச உணர்வோ காணப்படவில்லை. அவர்கள் மிக அமைதியாக பாதிகளிடம், பாருங்கள். நான் எந்த மஸீஹுக்கு ஒப்பானவராக வந்திருப்பதாக வாதிடுகிறேனோ அவர் இப்படிப்பட்ட குருடர்கள், செவிடர்கள், முடவர்களை சரியாக்கவில்லை. மஸீஹ் பௌதீகமான குருடர்களையும், பௌதீகமான செவிடர்களையும், பௌதீகமான முடவர்களையும் குணப்படுத்தினார் என்பது உங்கள் விசுவாசமாகும். மேலும் உங்களிடத்தில் கடுகளவாவது விசுவாசம் இருக்குமென்றால் ஒரு மலையைப் பார்த்து நகர்ந்து விடு என்று சொன்னால் அது நகர்ந்து செல்லும் என்றும், நான் (அதாவது இயேசு) காட்டுகின்ற அதே அற்புதங்களை நீங்களும் காட்ட முடியும் என்றும் உங்கள் வேதத்தில் எழுதப்பட்டுள்ளது. எனவே இந்தக் கேள்வி என்னிடம் கேட்கப்பட முடியாது. நான் எனது எஜமானர் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் காட்டிய அற்புதத்தைக் காட்ட முடியும். அந்த அற்புதங்களை நீங்கள் கேட்டால் நான் அதனைக் காட்ட ஆயத்தமாக இருக்கிறேன். மற்றபடி இந்தமாதிரியான அற்புதங்களைப் பற்றி, தம்மிடம் கடுகளவு விசுவாசம் இருக்கும் கிறித்தவரும் இயேசுகிறிஸ்து காட்டியது போன்ற அற்புதங்களைக் காட்ட முடியும் என்று உங்கள் வேதம் கூறுகிறது. எனவே நீங்கள் நல்ல விஷயத்தைக் கூறினீர்கள். எங்களுக்கு

கஷ்டமில்லாத அளவுக்கு நீங்களே குருடர்களையும், செவிடர்களையும், முடவர்களையும் ஒன்று சேர்த்திருக்கிறீர்கள். உங்களிடம் கடுகளவாவது விசுவாசம் இருந்தால் இவர்களை நலமாக்கிக் காட்டுங்கள் என்றார்கள். இந்த பதிலினால் பாதிரிகளுக்கு எந்த அளவுக்கு வியப்பு ஏற்பட்டதென்றால், அவர்களில் பெரிய பாதிரி அந்த குருடர்களையும், செவிடர்களையும், முடவர்களையும் மேடையிலிருந்து இழுத்து வெளியேற்றினார்.

ஆக, அல்லாஹ் தனது நெருக்கத்தைப் பெற்றவர்களுக்கு எல்லா சந்தர்ப்பத்திலும் கண்ணியத்திற்கான ஏற்பாட்டை செய்கிறான். மேலும் எப்படிப்பட்ட பதிலை அவர்களுக்கு புரிய வைக்கிறான் என்றால் பிறகு எதிரிகள் வாயடைத்துப் போய்விடுகின்றனர்.

ஹஸ்ரத் வக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் உண்மைக்கு சான்றாக நாம் ஒரு சம்பவத்தை அடிக்கடி கேட்டு வருகிறோம்.ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்களின் அறிவிப்பில் அது இவ்வாறு வருகிறது:

. அவர்கள் தபால் அனுப்பும்போது ஒரு பாக்கட்டில் கடிதத்தையும் வைத்து அனுப்பி விட்டார்கள். அது தபால் துறையின் விதிமுறைக்கு மாறுபட்டதாக இருந்தது. ஆனால் அவர்களுக்கு இந்த விதி முறை பற்றி தெரியாதிருந்தது. தபால் துறையினர் அவர்கள் மீது வழக்கு தொடுத்தனர். மேலும் அவர்களுக்கு தண்டனை கிடைக்க வேண்டும் என்பதற்காக பெரிய மேலதிகாரியை நியமித்தனர். கண்டிப்பாக தண்டனை கிடைக்க வேண்டும் என அழுத்தம் கொடுக்கப்பட்டது. நீதிமன்றத்தில் அவர்களிடம், நீங்கள் இந்த பாக்கட்டில் கடிதத்தை வைத்தீர்களா எனக் கேட்டபோது அவர்கள், ஆம்; வைத்தேன்; ஆனால் அது விதிமுறைக்கு மாறுபட்டது என்பது எனக்குத் தெரியாது என்றார்கள். அப்போது எதிர் தரப்பு வக்கீல் சார்பாக எதிர் வாதம் அதிகமாக எடுத்து வைக்கப்பட்டது. இறுதியில் நீதிபதி, இவர் இந்த அளவுக்கு உண்மை சொல்லி விட்ட பிறகு நான் இவரை விடுதலை செய்கிறேன் என்று தீர்ப்பளித்தார்.

ஹுஸூர் கூறுகிறார்கள்: இந்த சம்பவத்தை நம்மில் பலர் கேள்விப்பட்டிருக்கிறோம்; படித்திருக்கிறோம். ஆனால் நாம் கேட்டு பரவசப்பட்டு சென்று விடுகின்றோம். **இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமக்கு முன்னால் எடுத்து வைத்த உண்மைக்கான ஒரு சிறிய முன்மாதிரியாகும். ஆனால் எவர்கள் சின்ன ஆதாயத்திற்காக உண்மையின் தரத்தை விட்டும் கீழே விழுந்து விடுகிறார்களோ அவர்கள் தம்மைப் பற்றி ஆய்வு செய்ய வேண்டிய தேவை இருக்கிறது.**

தாவீஸ் ஓதுவது ஆகுமானதா? ஒருமுறை இந்த அறிவிப்பு அச்சாகியிருந்தது. அதாவது ஆத்தமின் முடிவுக்கு ஒரு நாள் எஞ்சியிருந்தபோது ஹஸ்ரத் (அலை) அவர்கள் சிலரிடம் இந்த சூராக்களை இத்தனை முறை ஓதி என்னிடம் கொண்டு வாருங்கள் எனக் கூறினார்கள். அது ஓதப்பட்டு கொண்டு வரப்பட்டபோது அவர்கள் காதியானுக்கு வெகு தொலைவிலுள்ள ஒரு பாழடைந்த கிணற்றில் போட்டு விட்டு சீக்கிரம் முகந்திருப்பியவறு திரும்பி வந்து விட்டார்கள். ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: இந்த ரிவாயத் பற்றி என்னிடம் கேள்வி கேட்கப்பட்டபோது, நான் அறிவிப்பு குறிப்பிட்டவரிடம் இதை நீங்கள் ஏன் குறிப்பிட்டீர்கள்? இது ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் செயலுக்கு முற்றிலும் மாற்றமானதல்லவா?எனக் கேட்டேன். இதன் பொருள் ஹஸ்ரத் (அலை) அவர்களும் தாவீஸ் வேலைகளை செய்து வந்தார்கள் என்றாகி விடும். இது தொடர்பாக ஆய்வு செய்தபோது ஒருவர் அப்படி கனவு கண்டதாகவும், ஹஸ்ரத் (அலை) அவர்களுக்கு முன்னால் அது பற்றி தெரிவிக்கப்பட்டபோது இதை வெளிப்படையான முறையிலேயே நிறைவேற்றி விடுங்கள் எனக் கூறியதாகவும் வருகிறது.

இங்கே கனவை நிறைவேற்றுவதற்காக ஒரு வேலையை செய்தல் என்பது வேறுவிஷயம். எண்ணம் கொண்டு அப்படி ஒரு செயலைச் செய்வது வேறு விஷயம். ஆக, சில விஷயங்கள் முன்பின் தெரியாமல் கூறிவிடுவதனால் பிரச்சனைகள் உருவாகின்றன.

ஒருமுறை ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் சண்டை சச்சரவுகளிலிருந்து விலகி இருக்குமாறு அறிவுரை கூறினார்கள். இது 1931 ஆம் ஆண்டிற்கான சம்பவமாகும். ஜமாஅத் இப்போது முதிர்ச்சியடைந்து விட்டது. நாம் நமது ஈமானை, மார்க்கத்தை , ஞானத்தை அதற்கேற்ப மாற்ற வேண்டும் என்றார்கள். இதைக் கூறி விட்ட பிறகு அவர்கள் குத்பாவிலேயே ஒருவரைப் பற்றி அவர் இதைப் பேணாததன் காரணமாக ஜமாஅத் அமைப்பை விட்டு நீக்கப்பட்டிருக்கிறார் என அறிவித்தார்கள். குத்பா முடிந்த பிறகு குத்பா ஸானியா ஆரம்பமானபோது ஒருவர் எழுந்து நின்று,

இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்களிடம், ஹுஸூர்! எவர் அமைப்பிலிருந்து நீக்கப்படிருக்கின்றாறோ அவர் பெயர் என்ன? எனக் கேட்டார். அப்போது இன்னொருவர், குத்பாவில் பேசக் கூடாது என்றார். இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் (ரலி) அவர்கள் புன்சிரித்தார்கள். பிறகு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் ஒரு சம்பவத்தைக் குறிப்பிட்டார்கள். பண்டித் லேக்ராம் கொலை வழக்கில் ஹஸ்ரத் (அலை) அவர்களின் வீட்டை சோதனையிடுவதற்காக ஒரு சூப்பிரன்டண்டு போலீஸ் வந்தார். வீட்டில் நுழைந்தபோது நுழைவாயிலின் மேற்பகுதியில் அவரது தலை இடித்தது. அதனால் கடுமையான காயம் ஏற்பட்டது. அவருக்கு தலை சுற்று வந்தது. நாங்கள் அவரிடம் பால் அருந்துமாறு கூறினோம். அதற்கு அவர் இப்போது நான் துப்பு விசாரிக்க வந்திருக்கிறேன். இப்போது பால் குடிப்பது எனது பணிக்கு மாறுபட்டதாகும் என்றார். இந்த சம்பவத்தை ஹஸ்ரத் (அலை) அவர்கள் கூறும்போது இதே மனிதர் ஹுஸூர்! அவருக்கு தலையில் அடிபட்டபோது இரத்தமும் வந்ததா? எனக் கேட்டார். அதற்கு ஹஸ்ரத் (அலை)அவர்கள் புன்சிரித்தவாறு, நான் அவருடைய தொப்பியைக் கழற்றிப் பார்க்கவில்லை என்று கூறினார்கள். ஆக, சிலருக்கு இவ்வாறு தேவையில்லாமல் சில நேரத்தில் பேசக்கூடிய பழக்கம் இருக்கிறது.

எப்படியிருந்தபோதிலும், குத்பாவில் பேசுவது தடுக்கப்பட்டதாகும். ஆனால் மற்றவர்கள் குத்பாவுக்கு மத்தியிலேயே பேசுவது தடுக்கப்பட்டது எனக் கூறி அறுவுறுத்தியதும் தவறான செயலாகும். அப்படிப்பட்ட நேரத்தில் சைகை காட்டலாம்; அல்லது பிறகு கூறலாம். அப்போது ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் இன்னொரு நகைச்சுவையைக் கூறினார்கள்: பள்ளிவாயிலில் ஜமாஅத்தாக தொழுகை நடந்து கொண்டிருக்கும்போது ஒருவர் வந்து உரத்த குரலில் அஸ்ஸலாமு அலைக்கும் எனக் கூறினார். அப்போது தொழுது கொண்டிருப்பவர்களில் ஒருவர் அதே மாதிரி உரத்த குரலில் வஅலைக்குமுஸ் ஸலாம் என பதில் கூறினார். அப்போது அவர் அருகில் இருந்த ஒருவர் தொழுகையில் பேசக் கூடாது என்பது உங்களுக்குத் தெரியாதா? நீங்கள் ஏன் பதில் கூறினீர்கள் எனக் கேட்டார்.

ஆக, எப்படி இருந்தாலும் குத்பாவும் தொழுகையின் ஒரு பகுதியாகும். எனவே குத்பாவில் பேசுவதும் தடுக்கப்பட்டுள்ளது. எவரிடமாவது பேச வேண்டுமென்றால் அல்லது தடுக்க வேண்டுமென்றால் இமாம் பேசலாம். இமாமும் தொழுகையில் பேச முடியாது. தொழுகையில் பேசுவது தடுக்கப்பட்டது போன்றே குத்பாவில் பேசுவதும் தடுக்கப்பட்டுள்ளது என்பதை குழந்தைகளுக்கு இப்போதிருந்தே வீட்டில் தர்பிய்யத் கொடுக்க வேண்டும்.

**Translated By:** ***O.M.Muzzammil Ahmad*** **For TAMIL Desk**

**Published By Nazarat Nashr-O-Isha'ath Qadian, 143 516, Punjab**